
MP - 02

# நல்வழி



(சிறுவர் இலக்கியம்)

கவிதை நூல்



ஆரையம்பதி க. சபாரெத்தினம்

Divisional Secretary
Divisional Secretariat
Manmunai Pattu
...vampathy.

# நல்வழி

## கவிதை நூல்

(சிறுவர் இலக்கியம்)

ஆரையம்பதி க. சபாரெத்தினம்

## நூல் விபரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நல்வழி |
| வகை | : | சிறுவர் இலக்கியம் |
| ஆசிரியர் | : | ஆரையம்பதி க. சபாரெத்தினம்<br>இல.177A, 6ம் குறுக்குத்தெரு,<br>செல்வாநகர், ஆரையம்பதி - 02, |
| பதிப்புரிமை | : | ஆக்கியோனுக்கே |
| பக்கங்கள் | : | VII + 40 |
| அளவு | : | A5 |
| அட்டைப்படம் | : | S. சுபாஜெனி |
| அச்சுப்பதிப்பு | : | வணசிங்கா பிறிண்டர்ஸ்,<br>திருமலை வீதி, மட்டக்களப்பு. |
| விலை | : | |
| ISBN | : | 978-955-53426-1-2 |
| Bar Code | : | 9789555 342612 |

# கல்வி அமைச்சு

## அனுமதிப் பத்திரம்

புத்தகத்தின் பெயர் நல் வழி அனுமதிப்பத்திர இலக்கம் கநூவெ/2/8737

நூலாசிரியர் க. சபாரெத்தினம்

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்தமான அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய மொழி இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமானக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

விஜித வெலகெதர<br>
செயலாளர்<br>
கல்வி நூல் வெளியீட்டு ஆலொசனை சபை

2010. 05. மாதம் 10.<br>
கல்வி அமைச்சு இசுருபாய பத்தரமுல்ல<br>
அனுமத்திரம் செல்லுபடியாகும் திகதி 2015. 05. 09

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch) Batticaloa Centre.
Ashrama & Children Homes.

*Ramakrishnapuram, Batticaloa.*
*Phone - 0094 65 2222752*
*Email - rkmbat@gmail.com*

நல்வழி வழியாகுக.

பகவான் ஸ்ரீ ராமகிருஸ்ணரின் திருவருள் கொண்டு திரு. ஆரையம்பதி க. சபாரெத்தினம் அவர்களால் வெளியிடப்படும் "நல்வழி" எனும் கவிதை நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"பிரதிபலன் எதையும் சிந்திக்காமல் நாம் உலகிற்கு செலுத்தும் ஒவ்வொரு நல்லெண்ணமும், நமக்குள் சேகரித்து வைக்கப்படுகின்றது. அத்தகைய நல்ல எண்ணம் எமது கர்மச் சங்கிலியை இணைக்கும் கண்ணி ஒன்றை உடைத்தெறிகின்றது. மக்களுள் மிகவும் தூயவர்களாகும் வரை மேலும் மேலும் நம்மை தூய்மைபடுத்திக் கொண்டிருக்கின்றது.

*– சுவாமி விவேகானந்தர் –*

சமுதாய மேன்பாட்டைச் சென்றடைய கவிதைகள் சிறந்த தொடர்பூடகம். சுவாமி விவேகானந்தரின் பொன் மொழியூடாக, பயன்கருதாச் செயலின் நல்விளைவு நன்கு வெளிப்படுகின்றது.

இந் நூலாசிரியர் சிறுவர் இலக்கியம் ஒன்றை இதனூடாக வெளிப்படுத்துவதை பார்க்க முடிகின்றது.

திரு. ஆரையம்பதி க.சபாரெத்தினம் அவர்கள் முன்பும் பல்வேறு இலக்கிய எழுத்துக்களையும் வெளியிட்டு புகழ்பெற்ற எழுத்தாளர். இவரது இம் முயற்சியை மீண்டும் பாராட்டி இறைவன் திருவருள் நிறைவாகப் பெற்றுச் சேவையாற்ற வேண்டுமென பகவான் ஸ்ரீ ராமகிருஸ்ண குருதேவர், புனித அன்னை ஸ்ரீ சரதாதேவி, விவேகானந்தர் ஆகியோரது நல்லாசிகள் என்றும் கிடைக்க வேண்டுமென பிராத்திக்கின்றேன்.

இறைபணியில்

28.04.2011

**Swami Jnanamayananda**
Swami in Charge
Ramakrishna Mission
Ramakrishnapuram
Batticaloa, Sri Lanka.

# முன்னுரை

அடித்தளம் நன்றாக அமைந்தாற்றான் மேற்கட்டுமானம் சீராக அமைந்து நீண்ட காலத்திற்குப் பலன் தரும். அதே போன்று குழந்தையாக இருக்கும் போதுதான் நல்ல விடயங்களைத் தேடிக் கற்றும் சிறந்த பண்புகளை விரும்பி ஒழுகி விருத்தி செய்தும் நற்பிரஜையாக விளங்க முடியும். அத்தோடு இளமைப் பருவத்தில் தான் கல்வி ஊற்று மணற்கேணி போன்று பிரவாகமாகப் பரிணமிக்கும். இதனாலன்றோ எமது ஔவை மூதாட்டியார் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றார்.

குழந்தைகள் பெரும்பாலும் நிர்மலமானவர்கள்; கள்ளம், கபடம் அற்றவர்கள். பெரியோர்கள் தங்கள் சூழலில் கற்பிக்கும் எதையும் இலகுவில் உள்வாங்கிக் கொள்ளும் இயல்பினர். அவ்வாறு உள்வாங்கும் விடயங்கள் சிறந்தவையாக இருப்பின் அதன் பிரகாரம் சீரணித்து நற்பிரஜையாக பரிணாமம் அடைவார்கள். கெட்ட சூழலில் வாழும் பிள்ளைகள் சூது, வாது, வஞ்சனை, பொய், களவு, பித்தலாட்டம் போன்ற இழி செயல்களுக்கு இரையாகி பின்னர் சமுதாயத்திற்கு ஒரு அவமானச் சின்னமாக உருவெடுக்க வாய்ப்பு உள்ளது.

எட்டு, ஒன்பது வயது தொடக்கம் பதினெட்டு வயது வரையான கல்வி கற்கும் குழந்தைகளின் அறிவு விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் நல்ல பல கருத்துக்களை மையமாக வைத்து இலகு நடையில் கவிதைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சாதாரணமாக வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய புற அழுக்காறுகளினின்றும் தமது வாஞ்சையை மாற்றி நன்னெறி மார்க்கத்தை நோக்கிப் பற்றுக் கொண்டு வளர்ந்து வர "நல்வழி" என்னும் இக் கவிதை நூல் பெருமளவில் உதவுமென நம்புகிறேன். சோவியத்து பஞ்சவர்ணக்கிளிகள், வராய் வலம் வருவோம் போன்ற கவிதைகள் உள்ளத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டுவதற்காகவும், இயல்பு நிலையில் சிறிது அனாயாசமாக சிந்திக்கவும் என்றே இடையிடையே உட்புகுத்தப்பட்டுள்ளன.

இந்நூலை ஆய்வு செய்து தரமுடையதென அங்கீகரித்து அதற்கான சான்றிதழையும் வழங்கிய இலங்கை கல்வி அமைச்சின் தேசிய நூலக அபிவிருத்திச் சபைக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூல் சிறந்த முறையில் அச்சுருப்பெற சகல வழிகளிலும் என் உடனிருந்து உதவி நல்கிய திருவாளர்கள் சி. சுரேந்திரகுமார் பி.ஏ (Dip.in.Edu.), எம். ஏ. அவர்களுக்கும் கு. மகேசன் அவர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

பலவேலை பழுவுக்கு மத்தியில் சிரமம் பராது இந்நூலை சீர்தூக்கி ஆராய்ந்து தெய்வீக ஆசியுரையை நல்கிய மட்டக்களப்புக் கல்லடி உப்போடை இராம

கிருஸ்ண சங்க முகாமையாளரும் வணக்கத்திற்குரிய துறவியுமாகிய சுவாமி ஞானமயானந்தா ஜீ அவர்களுக்கு என்றென்றும் அன்புடன் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை சிறந்த முறையில் கவர்ச்சியாகவும் தெளிவாகவும் அச்சிட்டு உதவிய வணசிங்க அச்சக உரிமையாளர் மற்றும் அந்நிலைய பணிசார்ந்த ஊழியர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூலிடை வெளிப்படக் கூடிய வழுக்கள் தவறுகள் ஏதும் இருப்பின் அவை எனது கருத்திற்குக் கொண்டு வரப்படின் அவற்றை நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு மறுபதிப்பில் திருத்தி வெளியிடக் வாய்ப்பளித்ததெனக் கொண்டு மகிழ்வடைவேன்.

நன்றி

இங்ஙனம்

க. சபாரெத்தினம்

177ஏ, 6ம் குறுக்குத் தெரு,
செல்வா நகர்,
ஆரையம்பதி - 02(30150)
06.04.2011

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 01) | கடவுளே நீ எங்கு சென்றாய் | 01 |
| 02) | நிலவே நீ இறங்கி ஓடி வா | 02 |
| 03) | நல்வழி | 03 |
| 04) | சிறுவர்களின் புதுவருடம் | 04 |
| 05) | மரம் நட்டு பூப்பறிப்பீர் | 05 |
| 06) | கல்வியை மறக்காதிரு | 07 |
| 07) | பண்பால் சிறக்க வாழ்தது | 08 |
| 08) | ஐம்பதிலும் ஆசை | 09 |
| 09) | கவலைக்கு மருந்துண்டு | 10 |
| 10) | சுவர்க்கமாய் உயர்த்தி உய்வோம் | 11 |
| 11) | தெய்வம் இருக்குது | 12 |
| 12) | உளமே உயர் பெரிது | 13 |
| 13) | சுயரூபம் காட்டுகிறார். | 13 |
| 14) | சின்ன விடயங்கள் தான் | 14 |
| 15) | உள்ளம் உயர்ந்த கோபுரம் | 15 |
| 16) | வாழ்வு முடிவதில்லை | 16 |
| 17) | முதல் எதிரி | 17 |
| 18) | அன்பே அணையா சோதி | 18 |
| 19) | சோவியத்து பஞ்சவர்ணக் கிளிகள் | 19 |
| 20) | இலங்கை எம் தேசமென்போம் | 20 |
| 21) | காதலை யாரறிவார் | 23 |
| 22) | வழியைக் காணேன் | 24 |
| 23) | சார்ஸ் நோய் | 25 |
| 24) | தரமான கவிதைகள் வேண்டும் | 26 |
| 25) | தமிழன் இன்று | 27 |
| 26) | வண்ணத் தமிழே, வாழும் தமிழே | 28 |
| 27) | யாரிங்கு தாங்குவரோ | 30 |

28) மெய்மை வளஞ் சேரும் 31
29) கொடுமை 32
30) நெஞ்சை ஒழிக்காதே 33
31) ஆசையால் அனைத்தும் மறையுது 34
32) தென்னை மரங்கள் 35
33) வாராய் வலம் வருவோம் 36
34) சாதிகள் ஏன் இல்லை? 38
35) முடிந்தால் பாரடா 39

# கடவுளே நீ எங்கு சென்றாய்....?


01. எல்லை இல்லாப் பெருவெளியும்
ஏகாந்த விண் வெளியும்
எண்ணிறைந்த கோள் முகிலும்
ஏன் படைத்தாய்? ஏன் படைத்தாய்?

02. பல்லுயிர்கள் பலவினமாய்
பார் முழுதும் படைத்து விட்டாய்
நல்லினமாம் மனிதரையே
நாயகமாய் தோற்று வித்தாய்

03. உண்ண உணவு வைத்தாய்
உயிர் வாழ காற்றீ ந்தாய்
தண்ணீர் ஊற்றெடுத்து
தரணியெல்லாம் பரவச் செய்தாய்

04. வண்ண வண்ணச் செடி கொடிகள்
வகை வகையாய் மரங்களைச் சார்
உண்ணும் விலங்கினையும்
உலகினிலே உலாவ விட்டாய்

05. ஊரும் சந்து முதல்
உயர் சாதி யானை வரை
எல்லா விலங்குகட்கும்
அறிவை மட்டும் மறைத்து விட்டாய்



06. மண்ணில் மனித னையே
மதியுடன் நீ படைத்து விட்டாய்
ஆசை மயக்கம் வைத்து
அவனையும் நீ குழப்பி விட்டாய்

07. உள்ளே இருந்து கொண்டு
உலகினையே ஆட்டுகின்றாய்
கண்களுக்கு தெரியாமல்
கடவுளே நீ எங்கு சென்றாய்?

# நிலவே இறங்கி ஓடி வா



1. வட்ட நிலா வானத்திலே
எட்ட நின்று தோணுது பார்
கிட்ட வரும் நாளினிலே
எட்டி அதைப் பிடித்திடுவேன்.

2. மாதமொரு முறை தோன்றி
மறைந்து விடும் மர்மமென்ன?
காலமெல்லாம் எங்கள் நெஞ்சம்
கவர்ந்திடுதே உன் வரவால்

3. ஆதவனுக்கு அஞ்சி நீயும்
அவன் மறைந்த இருட்டினிலே
பேரழகைக் காட்டிடவோ
தாரகைகள் சூழ வந்தாய்?

4. கள்ள மில்லா உன் அழகில்
கரிய நிறம் தெரிவதென்ன?
உள்ளமதில் கரவு கொண்டு
உலாவுவதால் தானாமோ?

5. சின்னஞ்சிறு பாலகர் நாம்
சேர்ந்து விளையாடுகின்றோம்
நீயும் உடன் சேர்ந்திடலாம்
சீக்கிரமாய் ஓடி வாராய்

# நல்வழி


1. பற்பல அற்புதம் கற்பிக்கும் விஞ்ஞானம்
பாலகரே நாம் பயின்றிட வேண்டும்
நல்லவை நாடியும் தீயவை போக்கியும்
நற்பணி புரிந்து உயர்ந்திடுவோமே.

2. நற்றமிழ் தன்னை பயின்றிடுவது என்றந்த
நாலுலக மொழியினைத் தூற்றிட வேண்டாம்
ஞாலமதிலின்று நன்கு செழித்திட்ட
ஆங்கிலம் தன்னையும் கற்றிடுவோமே

3. காட்டை அழித்து களனிகளாக்கி இக்
காசினியில் மேன்மை காட்டும் கமம்
ஏற்று உகந்த செய்முறையாலிங்கு உறு
ஏழ்மைப் பசிப் பிணி ஓட்டிடுவோமே

4. வீட்டினிலே உடை இல்லென் றிழிச்சொலால்
ஏங்கித் தவித்து இடிந்திடா வண்ணம்
நாட்டுக் கைத்தறி நெசவினாலின்பம்
நல்கிடுவோம் என்றும் நம்மவர்கே

5. கொடுங்கொலை பாதகம் சூது வஞ்சனை
கொள்ளிட பாவங்கள் செய்தவிர்த்து
பண்புடை சீலராய் அன்புடன் வாழ்ந்து
பாரினில் போற்றச் சிறந்திடுவோமே.



# சிறுவர்களின் புதுவருடம்


01. புதிது புதிதாய் பிறக்கிறது புத்தாண்டு
பூமியிலே ஊனுடலுக்கு ஏகிறது ஓராண்டு
சிறப்புடன் நாடு செழிக்கிறது வழி கண்டு
சீரான வாழ்வும்அமைகிறது அவனருள் கொண்டு,

02. சித்திரையில் பிறக்கும் புதுவருடம் - குறிப்பாக
இத்தரையில் எல்லோர்க்கும் பொது வருடம்
தைத்திருநாளில் மலரும் புதுவருடம் பாரில்
தமிழர் வாழ்வுக்கு ஒளி தரும் மணி மகுடம்

03. பச்சரிசிப் பொங்கல் பால் பழம் பாகமொடு
பல்சுவைச் சமையல் பட்சணங்கள் ஏராளம்
புத்தாடை புன்முறுவல் பூரிப்பில் மூழ்கியெழ
சித்திரைப் புத்தாண்டு சிறக்குது பார் உறவுகளில்

04. பெற்றோரை ஏனைப் பெரியோரை வலம்வந்து
பேரின்ப ஆசி பல பெற்றுப் பின்னுமந்த
உற்றாரை உறவினரை முகமன் துதிகூறி
உண்டு களித்திருக்கும் இந்நாளே பெருநாள்

05. பட்டாசோடு முட்டாசி பகல்வெற்றி
கட்டாயம் கொளுத்தி கொண்டாடு மிந்நாள்
பட்டாடை உடுத்திப் பலர் சூழ மகிழ்ந்து
சிட்டாகப் பறக்கும் சிறுவர்களின் புதுவருடம்



# மரம் நட்டுப் பூப்பறிப்பீர்

1. மந்திகள் தான் மரமேறும்
குந்தியிருந்து இலை பறிக்கும்
வந்து வந்தென் மல்லிகையில்
இந்த மந்தி ஏறுவதேன்.

2. பிள்ளைகளைப் போல் அவற்றைப்
பேணி நன்கு வளர்த் தெடுத்தேன்
எல்லைகளில் நிரை வகுத்து
எடுப்பாக நட்டு வைத்தேன்.

3. சொன்னபடி வளர்ந்தவையும்
சோலைகளாய் ஆன பின்பு
எங்கிருந்தோ வந்த திந்த
மந்தி இதை அழித்தொழிக்க.

4. சிரமம் ஈது நானெடுத்து
சீர்தூக்கி வளர்த்த தெல்லாம்
எருமை மாடாய் ஈதேறி
மேய்ந்திடவோ என்ன செய்வேன்?



5. மரத்தை நட்ட நாள் முதலாய்
மலர் சொரியும் காலம் வரை
குடம் குடமாய் நீருற்றி
குறை களைந்து காத்து வந்தேன்

6. கந்துகளை பிடித் திழுத்து
களைந் தெறிந்து போடுவதால்
வெந்து உடல் புண்ணாகி
வேதனையால் பதறுகின்றேன்.

7. சொன்னாலே கோபம் வரும்
சொல்லா விட்டால் மனம் வலிக்கும்
எந்நாளும் இது தொல்லை
எப்படி நான் பொறுத்திடுவேன்

8. எல்லா உலகிலுமே
நிறைந்திருப்பான் தெய்வமடா
நன்றாய் பூத்திலங்கும்
மல்லிகையும் தெய்வமடா

9. மலரைப் பறித்தெடுத்து
மாலைகளாய் சார்த்துவதால்
மரத்தை வருத்தும் இதை
மகிழ்ந்திடுமோ தெய்வமும் தான்

10. உண்மை அன்பிருந்தால்
உயர்ந்த பக்தி மேலீட்டால்
நல்ல மரம் நட்டு வைத்து
நாள் முழுதும் பறித்தெடுப்பீர்

# கல்வியை மறக்காதிரு



1. பட்சணம் உண்ணும் பாப்பாவே - என்
பக்கத்தில் வந்து அமர்ந்திடுவாய்
பக்குவமாகக் கதைகள் சொல்வேன்
பயன் பெற்று வாழ்ந்து உயர்ந்திடுவாய்

2. இத்தரை மாந்தரில் எம்மவரை
தமிழர் என்றே அழைப்பார்கள்
முத்திரை பதித்த வீரரவர்
மூவேந்தர் என்றே ஆண்டிருந்தார்

3. நீதியும் நேர்மையும் கொண்டவராய்
நித்திலத்தில் புகழ் சேர்த்திருந்தார்
கத்தியை தீட்டிய வீரர்கள் தான்
புத்தியை தீட்டா திருந்து விட்டார்.

4. அந்நியர் நாட்டைப் பிடித்ததனால்
ஆட்சியும் அவர் கைமாறியது
எண்ணிலா துன்பமிடை வந்து - நாம்
மண்ணில் சீர்குலைந்த கதையிதுவே

5. சுதந்திரம் பெற்றோ மானாலும்
சுதந்திரமாய் வாழ்ந்ததில்லை
சுய தந்திரம் படைத்தோர் வஞ்சனையால்
சுயம் இழந்தே இன்று வாழுகின்றோம்.

6. அந்நிய நாட்டில் குடிபெயர்ந்தோம்
அனைத்தும் இழந்தே ஓடிச் சென்றோம்
பண்பினை மட்டும் மறக்காது இன்னும்
பாதுகாத்து வாழ்ந்தே வருகின்றோம்

7. அன்பும் அறனும் நம் சொத்து
அறிவு ஒளியே எம் பேறு
என்றும் எதையும் இழந்தாலும்
நன்றே கல்வி மறக்காதிரு

# பண்பால் சிறக்க வாழ்த்து



1. எல்லோரும் மனிதர்களே
எங்கு நாம் வாழ்ந்து
எம்மொழி பேசி
எப்படி வளர்ந்தாலும்
எண்ணும் விதத்தில்
உண்ணும் தரத்தில்
ஊன் உடலமைப்பில்
எல்லோரும் மனிதர்களே.

2. பிள்ளையாய் பிறந்தபோது
பேதமை இருக்கவில்லை
பிரச்சினை என்று எம் முன்னே
பிரிவுகள் தோன்றவில்லை
உள்ளத்தில் முளைத்த தந்த
கள்ளத் தனத்தினாலே
உணர்வுகள் மாறி இங்கு
பகைமையும் மலர்ந்து போச்சே
ஆசையெனும் அழுக்காறு
ஆணிவேரூன்றியதால்
அன்பெனும் கோபுரமும்
அசைந்து பாறிச் சாய்ந்ததுவே

3. பண்பென்ற செல்வம் நீங்கி
பகைமையாய் மாறி ஓங்கி
புண்பட்ட நெஞ்சில் வேலாய்
பாய்ந்ததால் பாழ்பட்டோமே
இன்புற்று வாழ மக்கள்
இசைத்த வேதராகம்
கண்பட்டு கரைந்தது போல்
காற்றினில் நீர்ந்ததுவே
கண்கட்டு வித்தை போல
காணுமிவ்வுலக வாழ்வு
பண்பட்ட மக்கள் அன்பால்
பாரினில் சிறக்க வாழ்ந்து

# ஐம்பதிலும் ஆசை

1. குழந்தையாய் பிறக்க ஆசை - அதன்
குமிண் சிரிப்பினில் திளைக்க ஆசை
தெளித்த நல் மனதில் ஆசை
தெவிட்டாத தமிழில் ஆசை

2. காண்பதை பெறவோர் ஆசை - கணத்தினில்
களைந்தெறிந்து அழவோர் ஆசை
சேர்ந்து விளையாட ஆசை - பின்பு
சினங் கொண்டு பிரிய ஆசை

3. அடம் பிடித்த ழவோர் ஆசை - அதற்காக
அடிவாங்கி நோக ஆசை
துடி துடித் தோடி எங்கும்
துணிவுடன் புரள ஆசை

4. பயமது அறியா தெதையும் - கைப்
பற்றிட ஆசை - பின்னால்
பட்ட வேதனையை மறந்து
பாடிட இவ்வைம்பதிலும் ஆசை

5. கண்களை மூடிக் கொண்டு - கடவுள்
களிப்பினில் இருக்க ஆசை
கவலைகள் போக்கி நாளும்
கனிவோடு வாழ ஆசை



# கவலைக்கு மருந்துண்டு


1. கவலைக்கு மருந்துண்டு தம்பி - இதில்
கவனத்தை மேற்கொள்ளு நம்பி
விபரத்தை நான் சொன்ன பின்பு - நீ
விரும்பினால் ஏற்றுக் கொள் ஓம்பி,

2. வரவுக்குள் செலவென்ற திட்டம் - அது
வளர்ச்சிக்கு உரம் போடும் சட்டம்
விழலுக்கு நீ போடும் சத்தம்
வீண் பழிக் கெல்லாம் அதுவே தம்பட்டம்.

3. அளவோடு ரசித்திடு எதையும் - நிகர்
அன்பை அறிந்தே கொடுத்திடு எவர்க்கும்
அறிவின் துணை கொண்டு நாடு - நிதம்
அறவழி ஒழுகிட அயராது முயலு.

4. பிறர் புகழ்ச்சியால் மகிழ்ச்சி கொள்ளாதே
திறம் உரைப்பவர் எவர் பின்னாலும் போகாதே
அறம் காப்பதில் பழிஏது வந்தாலும்
நிகரத் தெவர் சொன்னாலும் பின்னில்லாதே.

5 ஆசைக்கு அனுமதி கொடுக்காதே
ஆத்மாவை விற்றுப் பிழைத்திடும் கேளு
பாசத்தை மட்டும் பார்க்காதே பதில்
பாசாங்கு சூழும் பயனை மறக்காதே



# சுவர்க்கமாய் உயர்த்தி உய்வோம்

1. அதிகாரம் அடக்கு முறையானால்
பரிகாரம் பல வந்தமாகும்
அதிகாரம் அன்பு மயமானால்
அநியாயம் அழிந்து போகும்
உணர்வுள்ள மக்கள் இதன்
உண்மையை புரிந்து கொள்வர்
திறனற்ற பிண்டம் என்றால்
திராணியற்(று) அழிந்து போகும்.



2. எதிலுமோர் கொள்கை வேண்டும்
அதிலுமோர் பற்று வேண்டும்
அன்பினைப் பகிர்ந்து கொள்ள
அதற்கென்ன தகுதி வேண்டும்?
புண்பட்ட நெஞ்சம் இங்கு
புலம்புதே யாரும் கேளீர்
புதுயுகம் படைத்திடலாம்
புறப்பட்டு ஓடி வாரீர் .

3. பால்முகம் காட்டி அழும்
பாப்பாவில் சாதி இல்லை
போர் முகம் காட்டும் உள்ளம்
புரிந்திட வேண்டும் இதனை
ஊனுடல் அழிந்து போகும்
உள்ளத்தால் ஒன்றே நாம்
அன்பினில் அமிழ்ந்து மேலாம்
ஆத்மாவை நோக்க வேண்டும்

4. மண்ணினில் வாழவென்றே
பிறந்திட்டோம் பேதம் வேண்டாம்
அன்பினில் திளைத்து ஒன்றாய்
அனைவரும் காண்போம் இன்பம்
அல்லவை போக்கி மேலாம்
அகிம்சையின் அறுவடையாய்
அகிலத்தில் நமது மண்ணை
சுவர்க்கமாய் உயர்த்தி உய்வோம்.

# தெய்வம் இருக்குது

1. தெய்வம் இருக்குது
தேடிப் பாருங்கள்
தேடியும் கிடைக்கா விட்டால்
தெளிந்து கொள்ளுங்கள்
தெளிந்த மனதினிலே
ஒழுங்கை விதையுங்கள்
அழுக்கை அகற்றிவிட்டு
அன்பைப் பேணுங்கள்

2. ஒழுங்கு விதியின் கீழ்
உலகம் இயங்குகிறது.
உணர்ந்து செயற்பட்டால்
உண்மை புரிந்துவிடும்
நடந்து முடிந்த பின்னால்
அறிவது தான் மனித இனம்
நடக்கப் போவதையே
தெளியும் தெய்வமனம்.

3. உள்ளத்தின் கோபுரமாய்
உண்மையை நிறுவுங்கள்
உலகத்தின் சத்திரமாய்
உணர்வை அளியுங்கள்
கள்ளத்தை கைது செய்து
பள்ளத்தில் வீசுங்கள்
தொல்லையின் பிறப்பிடமாம்
ஆசையை அகற்றுங்கள்



## உளமே உயர் பெரிது

1. ஊர் பெரிது, பார் பெரிது
உழவர் தம் ஏர் பெரிது
பாவலர் தேன் சுவைக் காவியம் பெரிது
கோயிலும் சுனையும் சூழ்தலம் பெரிது
சுந்தர நாயகன் அடிமலர் பெரிது
அறிவு மிகைந்தோர் ஆற்றல் பெரிது
அடக்கம் ஒடுக்கம் அதனினும் பெரிது
கேவலமற நிறை உளமே உயர் பெரிது.

## சுயரூபம் காட்டுகின்றார்

1. எட்ட நின்றால் இனிப்பிருக்கும்
தொட்டு ரசிக்க மனமிருக்கும்
கிட்ட வந்தால் கசப்பிருக்கும்
பட்டு நொந்தால் பலன் தெரியும்

2. மொட்டு மேனி பாவையுடல்
சொட்ட இனிக்கும் தேனருவி
தொட்டவுடனே மதம் பிறக்கும்
விட்ட பிழைக்கு வினை தொடரும்

3. ஆலம் கனியும் தூரத்திலே
அறிவு தெளியா நேரத்திலே
இனிய பழமென்றோர் உவப்பிருக்கும்
இதுவே உலகை உருவகிக்கும்

4. நல்லோர் போலத் தெரிகின்றார்
நம்பும் படியே பழகுகின்றார்
சூது வாது வஞ்சனையால்
சுயரூபம் காட்டுகின்றார்

# சின்ன விடயங்கள் தான்

1 சிரிக்க வேண்டியவன்
சிணுங்கி அழுகின்றான் - சிரம் தாழ்த்தி
அழவேண்டியவனோ
சீண்டிச் சிரிக்கின்றான்.

2. ஆணை இடவேண்டியவன்
அடங்கிக் கிடக்கின்றான் - அனைத்திலும்
அநீதி புரிகின்றவனோ
அதட்டி ஆளுகின்றான்

3. உண்மை உரைப்பவனோ
உரிமை மறுக்கப்படுகின்றான் - ஏமாற்றிப்
பிழைப்பவனோ உயர்வாய்
மதிக்கப்படுகின்றான்.

4. உள்ளம் உயர்ந்தவனோ
பின் தள்ளப்படுகின்றான் - கயமை நெஞ்சில்
கள்ளம் மலிந்தவனோ
கனவான் எனப் போற்றப்படுகின்றான்.

5. தெள்ளு திரையுலகில்- நாளும்
நிகழ்கின்ற இவையாவும்
சின்ன விடயங்கள் தான்
சிரித்து மகிழுங்கள்

# உள்ளம் உயர்ந்த கோபுரம்


1. சின்ன மனிதர்கள்
பெரிய பதவியில்
வீற்றிருப்பது விளைவு அற்றது.
பெரிய மனிதர்கள்
சிறிய பதவியை ஏற்றிருப்பது
ஏற்றம் மிக்கது

2. தன்னை அறிந்தவன்
தாழ்ந்த போதிலும்
உண்மை நிலையினை
உணர்ந்து கொள்ளுவான்
பெண்மை மனத்தினன்
பெருமை பேசினும்
திண்மை இன்றியே
திக்கு முக்காடுவான்

3. உள்ளம் மென்பது
உயர்ந்த கோபுரம்
பண்பு அதனிடம்
படிந்த சித்திரம்
அன்பு கொள்வதும்
ஈன மடைவதும்
தத்தம் நிலையினில்
தவழும் வேதங்கள்



## வாழ்வு முடிவதில்லை.....



1. ஓடி ஓடி உழைத்து
ஒழுங்காகப் பாடுபட்டு
மாடி வீடு கட்டி
மகிழ்ச்சியாய் குடியிருந்தேன்.

2. நாடி வந்த உறவுகளும்
தேடி வந்த நண்பர்களும்
நாறுமுடல் ஆறுமுன்னே
நகர்ந்து போய் விட்டார்கள்.

3. பாழுமிந்த உடல் அளித்த
பல்சுவையை எண்ணி எந்தன்
பத்தினியும் சிலகாலம்
பதிவிரதையாய் இருந்தாள்.

3. கூடி எந்தன் மைந்தர்களும்
குணமிகுந்து ஓருணர்வாய்
குடமுடைத்து சுடுகாட்டு
கொள்ளி வைத்து சென்றுவிட்டார்.

5. சந்தியிலே நின்றிருந்தோர்
சரித்திரத்தை நெறிப்படுத்தி
என்வாழ்வில் நடந்தவற்றை
எழுச்சியுற்றுப் படிக்கலுற்றார்
என் வாழ்வு முடிந்ததென்று
எல்லோர்க்கும் பறையறைந்தார்.
நல்லோர்க்கும் நயவஞ்சகர்க்கும்
ஒருநாளும் வாழ்வு முடிவதில்லை

# முதல் எதிரி

ஒவ்வொரு நிமிடமும்
ஏங்குகின்ற மனிதனே
மகிழ்வோடு வாழ
எது இல்லை உன்னிடம்?
எண்ணிப்பார்
மனம் இல்லை
குணம் இல்லை
மற்றவர்களுக்கு உதவும்
பண்பு இல்லை
மறக்கும் மன்னிக்கும்
மாண்பு கூட இல்லை
மற்றெல்லாம் நிறையவே
உண்டு வாழ்வினில்
என்ன இருந்தும்
ஏது கிடைத்தும்
அன்பும் பண்பும்
இல்லாத வாழ்க்கையில்
ஆனந்த வாழ்வுக்கு
ஏது சாத்தியம்?
கோடி கோடியாய்
பணம் குவியலாம்
குரங்கு மனத்தினில்
ஈகைக்குணம் இல்லையேல்
அதுவே உன் வறுமை நிலை!
பிறர் துன்பம் கண்டும்
வாழா விருக்கும்
பிணியுள்ளமே உலோபித்தனம்!
நெகிழ்ச்சியடை
மகிழ்ச்சி பெறலாம்
மனதிற்கு எதிராக
மந்தரித் தெழ
இதுவே உன் முதல் எதிரி.

# அன்பே அணையா சோதி

அன்பே உலகின் அணையா சோதி
அதற்கே என்றும் உயிர்கள் அடிமை
என்பும் தோலும் போர்த்த உடலில்
பண்பு இல்லையேல் படிப்பால் பயனென்?

பட்டமும் பதவியும் பகன்றிட வன்று
பாரினில் சேவை புரிந்திட முயன்று
அறிவினால் அடக்கிட நினைப்பவன் மண்டு
அறிக மனிதா! நிலையிலா வாழ்வில்

மனிதரில் ஏற்றத் தாழ்வுகள் உண்டு
அறிஞன் அறிவிலி என்பதவ்விரண்டு
அன்பும் பண்பும் அறிந்திடு கொண்டு
அவனியில் மூடரை ஒதுக்கிடு கண்டு

அடிக்கும் கரமும் அணைக்க விழையும்
அன்பின் அனலில் அடிமைப் பட்டே
இடுக்கண் வரினும் மிடுக்கைத் தவிர்த்தால்
இறைவன் அருளால் இனிதே மறையும்.



# சோவியத்து பஞ்சவர்ணக் கிளிகள்

1. மங்கி வரும் மாலை வெயில்
பொங்கி எழும் நீரலை மேல்
தங்மென மின்னுமெழில்
தாரகையோ இவ் வஞ்சியர்கள்

2. கொஞ்சு மிள விஞ்சு மிதழ்
கொவ்வையென மை சிவந்து
கொண்டை பல வண்ண மதில்
கோதிழையார் வலம் வருவர்

3. பஞ்ச வர்ண கிளிகளுமே
பார்த்து உடல் நாணி நிற்க
துஞ்சு விறல் சோவியத்து
துடியிடையர் கண்ணசைப்பர்

4. துள்ளு நடை போட்டிவரும்
தூரவழி செல்கையிலோர்
துன்பமுடன் ஆடவரும்
துரித வழி தொடர்ந்திருப்பார்



# இலங்கை எம் தேசமென்போம்

1. காரிருள் அகன்றது; பூரணை நிலவென
புன்னகை பூத்தது
போர்நிலை மாறியே பொன்னென அமைதியும்
பூமியில் பொதிந்தது
சீர்பெறு நாட்டினில் சிறப்புக்கள் செய் பல
சிந்தனை உதித்தது
பார்புகழ் மீதிலே வளம் பல கொழித்திடும்
சமாதானமும் பிறந்தது.

2. நல்லவர் ஆட்சியில் நன்மைகள் மலிந்திடும்
நம்புவோம் தோழர்களே
புல்லர்கள் விட்டுப் போயினர் மீண்டும்
புவியாள வருவதெங்கே
இல்லற வாழ்வு இனிதென வாழ்ந்திட
இது நல்ல தருணமன்றோ
பல்லோரும் சேர்ந்து பாகுபாடின்றியே
பாடுவோம் சாந்தி கீதம்

3. சன சக்தியை விஞ்சும் பலமுள்ள வேறு
இணை சக்தி தானுமுண்டோ
மன சக்தியோடு சன சக்தி சேர்ந்து
தொழில் சக்தியான பின்பு
பண சக்தியாக தடையின்றி எங்கும்
முழு நாடும் காணுமின்பம்
வள சக்தி என்று வருணிக்கும் இதுவே
வழி காட்டும் வறுமை ஒழிய

4. பேர் புகழ் தேசமும் பெரிதென மதித்திடும்
திட்டங்கள் உதித்தனவே
கார் கொடை வள்ளல் கருணையினாலதைக்
கண்டு கொண்டார் ஏழை
சீர் பெற அவனியில் சிறப்பெனப் புகலிடம்
சேர்ந்தது அவர் வாழ்வில்
தேரினை அளித்த பாரியை நிகர்த்த
வேந்தனும் இவனன்றோ

5. இன்று இந்நாடு என்றுமில்லாத
இன்னல்கள் பெற்றதல்லோ
நன்று நன்று நாம் நல்லோர்கள் காட்டும்
நலமான பாதை செல்வோம்
ஏற்றத் தாழ்வு இழி பேசும் குணநலன்கள்
தீர்த்துத் தொலைந்திடுவோம்
நேற்று நடந்த பிணி வேற்று உணர்வுகளை
வேரோடு சாய்த்திடுவோம்

6. அண்ணன் தம்பியென அனைத்து மக்களொன்றாய்
அன்பு பூண்டு நிற்போம்
பண்பு குன்றிடா வாழ்வு பெற்று அதனில்
பக்தி சிரத்தை கொள்வோம்
இன்று போலவே இனிய உறவுகளை நாம்
என்றும் பேணி மகிழ்வோம்
நன்று நன்றென நாடி நல்லதையே
கூடிப் போற்றி மகிழ்வோம்

7. இல்லை என்ற இழி சொல்லை நீக்கி விட்டு
இயலும் மார்க்கம் காண்போம்
இனங்களிடையே பகைமை போக்கி நல்
உறவை விருத்தி செய்வோம்
தொல்லை நம்மை தொடர்ந்த போதிலும்
துவண்டு போகாதிருப்போம்
சொல்லில் வாழும் பெருநா நயத்தையே
சொத்தென விலை மதிப்போம்.

8. சுந்தரத் தமிழிலே சிங்களக் காவியங்கள்
சீருற மொழி பெயர்ப்போம்
சொத்தென விளங்கும் எம் இலக்கிய முத்துக்கள்
சுவை பட அதில் வடிப்போம்
எல்லோரும் இந்நாட்டில் இணையென ஏற்று
இலக்கியம் பல படைப்போம்
பல்லினம் ஒன்றாய் பரிவுடன் வாழும்
இலங்கை எம் தேசமென்போம்.

# காதலை யாரறிவார்

1. மாலைப் பொழுதினிலே - களிதரும்
பாலத் தெருவினிலே
கோலத் திருமகளைக் - காண நெஞ்சு
தாவிக் குதிக்குதடி
நீலப்புடவையிலே - அவள் வரும்
நேர்த்தியை யாரறிவார்
காலமோ கை கொடுத்தால் - காணும் நல்
பாக்கியம் நான் பெறுவேன்.

2. வட்ட வடிவழகு - வாஞ்சை நிறை
உத்தமப் பெண்ணணங்கு
கிட்ட வரும் போது - ஏனோ என்னை
முற்றும் மறக்கின்றேன் நான்
பேசிப் பழக வென்று - தினமுந்தான்
ஏரிக்கரையடியில்
நேசக்கரம் விரித்தால் - நிமிர்ந்தென்னை
நோக்க மறுப்பதேனோ

3. வந்தனம் கூறி நின்றேன் - சில நாள்
வாடி வளைந்து நொந்தேன்
இன்னும் அவள் போக்கு - என்னை மிக
ஏக்கத்தில் ஆழ்த்துதம்மா.
சிந்தையில் உள்ளவற்றை - சிறிதும்
துஞ்சாமல் கூறி விட்டேன்.
வஞ்சி அவள் மீது - வளருமென்
காதலை யாறறிவார்

4. உள்ளமும் கூராகி - உறுதி
உரம் பெற்று வேராகி
பிள்ளை அழுவது போல்
பித்தம் தலைக்கேறி விட்டதுவோ
வெள்ளை மனத்தினளே - விரைந்து
ஓடி வர மாட்டாயோ
கள்ளம் கபடமில்லை - நம்பி என்னை
நாடி வர மாட்டாயோ.

## வழியைக் காணேன்

1. தமிழ னென்ற வித் துலைந்து
தலை தளர்ந்து குண மிழந்து
தரணியெங்கும் ஊழ் சுழியில்
பரவுகின்ற பான்மை கண்டேன்

2. இறை பணிந்து தலை நிமிர்த்தி
இமயம் வரை கொடி பொறித்த - அவ்
இயலுமையைப் போக்கி இன்று
இரந்து நிற்கும் காட்சி கண்டேன்.

3. எரிகின்ற வீட்டிலும்தான் தெளிந்த
எண்ணெய் ஊற்ற எத்தனைபேர்
எம்மவரில் இருக்கின்றார்கள்
என்பதையும் கண்டு கொண்டேன்.

4. முடிவெடுக்கும் மதி இருந்தும் - அதைக்
குறைபடிக்கும் கூட்டம் கண்டேன்
சிறை படிந்த எம்மினத்தின்
முறைமை மாற்றும் வழியைக் காணேன்.

## சார்ஸ் நோய்

மது -
வாழ்க்கையில் வடு அது
மயங்கினால்
ஏற்படும் மயான மடு
மடையரின் பாசக் கயிறு
மகிழ்ச்சியின் புதையற் கல்லு
குடியினைக் கெடுத்து நம்மை
அழித்திடும் "அந்தரக்ஸ்"
அதுவோர் "சார்ஸ்"

குறிப்பு : அந்தரக்ஸ், சார்ஸ் என்னும் இவைகள் தற்போது கண்டு பிடிக்கப்பட்டடுள்ள உயிர் கொல்லி நோய்கள். இவை பீடிக் கப்பட்டால் மரணத்தை ஏற்படுத்தும் என்கின்றது வைத்திய விஞ்ஞானம்.

# தரமான கவிதைகள் வேண்டும்

01. தமிழிலே கவிதைகள் வெளிவர வேண்டும் - அவை
தரமென்று அவனியில் புகழ்பெற வேண்டும்
தனித்துவம் அவற்றிலே ஒளிபெற வேண்டும்
தமிழர்தம் மாண்பும் உயர்ந் திட வேண்டும்.

02. உயர்தனிச் செம்மொழி தமிழ் - அதன்
உறுதியை உலகம் மதித்திட வேண்டும்
பயன் கருதாவோர் பான்மையை நாடி பலர்
பயன் பெற்றிட தமிழ் படித்துய்திடல் வேண்டும்

03. மரபினை மீறாத கவிதை; தமிழ்
மண்ணின் மாண்பினை உயர்திட இன்னும்
திறமுடன் படைத்திடின் வாழும்; பழ(ம்)
மரபொடித்திடின் தாழ்ந்து மடிவது திண்ணம்

04. புதுமையை ஏற்றிடல் நீதி; அதற்காய்
புனிதத்தை இழந்திடல் கூடுமோ மீறி
புதுமையும் பழமையும் வேண்டும்; அன்றேல்
புதுயுகம் புறப்பட முடியாமல் போகும்

04. இலகுவாய் இருப்பது நன்று அதற்காய்
இருப்பதை இழப்பதற் கொப்புதல் தீது
படிப்பவர் தரத்தினைக் கூட்டி பயன்
பெற்றிட முயல்வது ஆக்கத்திற் குறுதி

# தமிழன் இன்று

01. தமிழனைத் தேடிப் பார்த்தேன்
தமிழன் எங்கும் இல்லையே
தண்ணீர் குடிக்கும் தம்ளரைத்தான் - இன்று
தமிழர் என்று காண்கிறேன்.

02. தின வெடுத்த தோள்கள் வீணில்
திராணியற்றுப் போனதே
மனமுடைந்து குணமிழந்து
மனிதப் பண்பும் தாழ்ந்ததே.

03. ஈகை அறம் நீதியென்ற
அருங்குணங்கள் போக்கியே
பின்னமுற்று இன்னலுற்று
பிதற்றுகின்ற கூட்டமே.

04. சங்கத் தமிழ் போற்றி வாழ்ந்த
நக்கீரனைத் தேடினேன்
சங்கை கெட்டு பங்கப்பட்டு
வாழும் கவிஞனைப் பார்க்கிறேன்.

05. முன்ன மவன் வாழ்ந்த சீர்மை
இன்னும் பல சொல்கிறோம்
தன் மானம் விட்டகன்ற பின்பும்
தரணியிலே இருக்கின்றோம்.

## வண்ணத் தமிழே ! வாழும் தமிழே!

01. வண்ணத் தமிழே - வளர்
வண்ணத் தமிழே
வானினும் புகழ் படைத்த
வாழும் தமிழே.

இன்பத் தமிழே - எழில்
இன்பத் தமிழே
ஈசன் திருவாய் மலர்ந்த
தெய்வத் தமிழே
கொஞ்சும் தமிழே - அன்பு
கொஞ்சும் தமிழே
விஞ்சும் இளவேனிலென
வீசும் தமிழே.

02. எண்ணக் கரு கொண்டவர்கள்
உன்னை நாடினால்
வண்ணத் தமிழிலக்கியங்கள்
ஆக மாறுவாய்
விண்ணனைய புகழ் படைத்த
காப்பியங்களும்
வேதநெறி போற்றிசைக்கும்
தேவாரங்களும்
கண்ணனைய போற்று மறை
திருக்குறளும்
காசினியில் உந்த னெழில்
காணப் போதுமே.

03. ஔவை மூதாட்டியாரின்
அருள் வாக்கு
கம்பர் பொழி கவி மழை
இன்ப ஊற்று
நெஞ்சு நிறைந் தொலித் தெழும்
சிலம்போசை
இந் நித்திலம் அழிந்தபோதும்
நிலைத்திடுமே.

04. பக்தி ரசம் சொட்டும் தீம்
பாவைய முதம்
முக்தி நெறி காட்டு மின்பத்
திருவாசகம்
சந்ததமும் ஓசை மலி
திருப்புகழும்
இந்த பாரினிலே வேறுமுண்டோ
எந்த மொழிக்கும்?

05. நல்லமுது படைத்தது போல்
நவரசத்தை
அள்ளி அள்ளிச் சொரிந்திடும்
கலையமுதம்
இயலிசை நாடக மென்றிதை
வகுத்தார்
இசைவுடன் அறிஞர்கள்
உன்தனழகை.





## யாரிங்கு தாங்குவரோ?

01. தெள்ளு தமிழ் காப்பியங்களைந்தினையும் அகத்துணர்ந்து
சொல்லுயர்ந்த தமிழ் மறையாம் திருக்குறளின் புகழ் பரப்பி
கள்ள மில்லா உள்ளத்தே கலை ஞானம் நனி சேர்த்த
தெள்ளமுதே திருவே கி.பெ.ஆ என்னும் திரவியமே

02. ஆன்றோர் வகுத்த தமிழ்மூன்று மகத்திருத்தி
இயன்றோர் படித்தின்புறவே பொருள் பாலித்தியல்பாக
ஈன்றதமிழ் நாட்டிற்கும் ஏனைத் தமிழர்க்கும்
சான்றோனாய் வாழ்ந்த தனிநாயகமே

03. வீட்டில் விருந்தோடும் விறல்மிகு பலரோடும்
நாட்டில் நல்லறிஞர் நட்போடும் பார் புகழ
ஈடில்லா இலக்கியத்தின் இன்ப நெறி கண்டோனே
மாறில்லா மாமனித மறப்பேனோ நின்மாண்பினை நான்

04. தமிழுக்குச் சோதனைகள் வந்துற்ற போதெல்லாம்
தலைநிமிர்ந்து தனையுணர்ந்து தரம்சேர்த்த தகுதியினை
தமிழென்றும் மறவாது தமிழர்கள் மறந்திடினும்
இனியொன்று வந்திடின் யாரிங்கு தாங்குவரோ

---

குறிப்பு: *1995ம் ஆண்டு இறைபதம் எய்திய முத்தமிழ் காவலர் மூதறிஞர் கி..பெ.ஆ. விஸ்வநாதம் அவர்களின் நினைவாகப் பாடப்பட்ட பாமாலை அஞ்சலி.*

# மெய்மை வளம் சேரும்



01. பாரதியின் பள்ளியிலே பலநாள் படித்ததுண்டு
பண்பெனும் ஓடத்தில் பயணம் செய்ததுண்டு
கம்பனின் காவியத்தில் மிதந்து கரைகாணா
கவித்துவத்தை எண்ணி ஏங்கிப் பார்த்ததுண்டு

02. நீதி நெறி நூல்கள் நிறையக் கற்றதுண்டு
பாரதக் கதை படித்து பயன் பல பெற்றதுண்டு
தெய்வமொழிப் புலவர் நுண்ணறிவை மெச்சி - நிதம்
உய்யும் வழியதனால் கூடவே அறிந்ததுண்டு.

03. உள்ளக்கமலமதில் உணர்வுகளை ஊட்டுவித்து
வெள்ளைத் துகிலாடை மேலணிந்து இன்பமுடன் - தூய
பள்ளித் தலமனைத்தும் கோயிலெனக் கொண்டருளும்
கல்விப் பெரு நிதியாம் சரஸ்வதிதாள் பணிந்ததுண்டு

04. எல்லாம் வல்ல எமதீசன் கணபதியின்
மல்லிகை பூம்பாதம் மகிழ்ந்து வணங்கியதால் - நல்ல
சொல்லாற்றல் பெற்று சுருதித்தமிழ் சேர்த்து
எல்லோர்க்கும் உதவும் நயம்சில படைத்ததுண்டு

05. கல்லாமை கற்றுடைமை எல்லாமே அவனருளால்
பொய்யாமை உற்றுப் புகழ்பெறும் உண்மையினால்
தெய்வத் திருவுடைமை தெளி நலம் பெற்றோர்க்கு
மெய்மை வளம் சேரும் மேதினியில் இதுவுறுதி.



# கொடுமை

1. கொடுமை என்ற சொல்லுக்கு
கொலை என்பதல்ல அர்த்தம்
தீமை என்னும் தீர்வையிலே
அதற்குமோர் விலை உண்டு

2. இதயமற்றுப் பொய்யுரைத்து
இடறு பல புரிந்து
இரக்கமற்று மனமுடைய
இம்சிப்பதுவே கொடுமை

3. தயக்கமின்றி பிறர் பொருளை
தமதாக்கிக் கொள்வதற்கு
தலையுடைத்துத் திட்டம் தீட்டி
தவறு செய்தல் பெருங் கொடுமை

4. நல்லோரைப் பார்த்துக் கூசாமல்
நாவழிய வசை கூறி
நயவஞ்சகம் புரியும்
நடத்தையுமோ மண்ணில் கொடுமை

5 கொன்றுவிடும் குறியால்
குற்றமுண்டே ஆயினும்
மன்றில் அதன் தீமை
மனித உயிர்க்கில்லை
நின்று கொல்லும் நீள்துரோக
நெறிமுறைகள் அதற்கு மேல்
மென் மனதை வேரோடு
சாய்க்குமோர் கோடரியாம்.

## நெஞ்சை ஒழிக்காதே

1. பக்ரீரியாவும் வைரசும் பாவிகளல்ல - அவை
வாழ்வை முடித்திடும் தீக்காவிகள் தாம்
பக்கத்து வீட்டு பார்வதிதான் நம்மைப்
பாழடிக்கும் ஈனப் பாதகியாம்

2. காட்டில் வாழும் கொடிய புலி
வேட்டை மிகுந்த பெரு மிருகம்
நாட்டில் விளங்கும் மனிதர்களோ நம்மை
நாதி கலக்கும் யாளி சிங்கம்

3. தோன்றிற் புகழுடன் தோன்றி விடு - துயர்
தோன்றா வண்ணம் வாழ்ந்து விடு
மூன்றுமமைந்த வாழ்க்கையினை
முயன்றே பெற முயற்சி செய்வாய்.

4. ஆசைக்கு அனுமதி கொடுக்காதே அது
ஆத்மாவை விற்றுப் பிழைத்து விடும்
நீதிக்கு நெஞ்சை ஒழிக்காதே - நேர்மை
போதிக்கும் உண்மை மறக்காதே.

5. சாதிக்கு வேலி போடாதே தமிழ்
சாற்றும் நெறிமுறை மீறாதே
தாலிக்கு மதிப்பு கொடுத்து அதன்
தத்துவம் புரிந்து வாழ்ந்திடுவாய்

6. பாவிக்கும் வாழ்வுண்டு மறக்காதே - வையகத்தில்
பயன்கருதாப் பணிகளை ஆற்றிவிடு
சாமியாய் இங்கு வாழ்பவர் சிலபேர்
சால்வை மூடிய ரோகிகள்தாம்

## ஆசையால் அனைத்தும் மறையுது

01. நீதி என்பது விழலாச்சு
நேர்மை என்பது நிழலாச்சு
பல்லிழிப்பதே தொழிலாச்சு - எங்கும்
பண்பு கெட்டதோர் வாழ்வாச்சு

02. காவியம் கூறும் நெறிகளிலே
கதைகள் பலநாம் கேட்டிருப்போம்
பூமியில் வாழும் வாழ்க்கையிலே
புத்தகப் போதனை புழுதியிலே.

03. படித்தது ஒன்று நடப்பது ஒன்று
பட்டம் பெற்றோர் நாட்டினிலே
பணமே என்ற குறியால் இந்த
பரம்பரை தோன்றுது பாரினிலே.

04. அன்பாய்க் கூடும் இருவர்க்குள்ளும்
அடுத்தவன் கேடே நினைக்கின்றான்
முன்பாய்க் கேட்டால் முளிக்கின்றான்
முன்போல் அதையே தொடர்கின்றான்.

05. பிறர்க்குச் செய்யும் சேவைக்கும்
பிரதிபலனே நோக்கின்றான்
நன்மை என்பதை இம்மையிலே
நகருமுன்பே மறக்கின்றான்.

06. மான மென்பதே தெரியவில்லை
மக்கள் வாழ்க்கையைப் புரியவில்லை
ஆசை பெருகிடும் மனத்தாலே
அனைத்தும் மறையுது அதனாலே.

# தென்னை மரங்கள்

உண்மையைக் கண்டஞ்சுவோர்
கோழைகள் - உளம்
ஊனமுற்று எதிர்க்காதிருப்போர்
பேடிகள் - வன்
எண்ணமுடன் எழுந்தெதிர்ப்போர்
திருடர்கள் - தமக்கு
ஏதும் வேண்டா நிலை நின்று சாற்றுவோர்
மனிதர்கள்.

கள்ளம் கபடம் அறியாதவை
குழந்தைகள் - உள்ளே
குள்ளம் குரோதம் நிறைந்தவை - அகக்
குருடுகள்
தன்னைப் பற்றி மேலாய் - நினைப்பவை
நச்சு மரங்கள்
பிறர் தேவையைத் தினம் உணர்ந்து - வாழ்பவை
தென்னை மரங்கள்

# வாராய் வலம் வருவோம்

01. பாரெல்லாம் போற்றுகின்ற பாடுமீன் நாட்டினிலே
பண்போடு வாழுகின்ற பைந்தமிழர் நாங்களையா
சீராய்த் செழித்தோங்கும் இச்செந்நெல் விளைநாட்டை
வாராய் ஒருக்கால் வலம் வருவோம் இளஞ்சுடரே

02. நேராய் நாமிப்போது நெடுக நடந்துசென்று
தீராவினை தீர்க்கும் திருவருள் சேர் நாயகனாம்
பாரில் புகழ் படைத்த மாமாங்கப் பதியுறையும்
காரானைக் கணபதியின் தாள் பணிந்து நலம் பெறுவோம்.

03. நேரே தெரிவதுதான் நித்திலத்தில் முத்தெடுக்கும்
வண்ண வடிவூட்டும் வங்கப் பெருங்கடலாம்
தேர்போல் மிதக்குதுபார் தெற்குத்திசை பாலமது
வாராய் நிலவொளியில் மீன்பாடும் இசை கேட்போம்.

04. அந்தோ தெரிகிறதே அன்னமோ டரவுருவாய்
சென்னியதில் பதித்த சிறந்த முத்துச் சிற்பமுடன்
முன்னைப் பயனதுவால் முத்தமிழில் வித்தகனாய்
முதிர்ந்த முனிவனவன் முத்திரைசேர் நினைவுலகம்

05. அப்பாலும் இப்பாலும் எப்பால்தான் பார்த்தாலும்
அடங்காத சனசந்து அளவில்லா வளநாடாய்
அகிலத்தில் அடர்த்திக்கு அமைந்ததோர் முதலிடமாய்
ஆனபெயர் பெற்ற காத்தான்குடி இதுவே.

06. அடுத்து வந்துவிட்டோம் அழகு, மணம், மாலை
அர்த்தம் பொதிந்த தமிழ் இனிய வள பூமி
அருமை பெருமை கொண்ட ஆலயங்கள் மலி
அறிஞர் பலர் பிறந்த ஆரையம் பதி என்க.

07. மாண்புமிகு மதுரையிலே மனையாட்சி புரிகின்ற
மீனாட்சி அம்மன்போல் மிக்க புகழ்படைத்த
காமாட்சி கற்புக் கரசி வழக்குரைத்த கண்ணகியாள்
அருளாட்சி செய்கின்ற ஆரையம்பதி இதுவே.

08. பேரும் புகழும் நற்பேறும் தந்தெமக்கு
வீரம் விளைக்க விரும்பிய போதெல்லாம்
நீரைச் சொரியும் மலையருவியாய் விளங்கும்
ஞானச் சுடர் வேலன் திருத்தலம் தான் இதுவாம்.

09. பச்சையாய் தெரியுமிடம் படுவான்கரை என்பர்
மிச்சமாய் உள்ளதிது எழுவான் கரைபேரு
கச்சைபோல் பாயுமிந்த வாவிதான் இதற்கெல்லை - இங்கு
கொச்சையாய் பேசுதமிழ் செவிக்குத் தனியின்பம்

10. கற்சுவர் எழுப்பி மேல் கடினமதில் நாற்புறமும்
கச்சிதமாய் கட்டியந்த வாவிக்கரையோரமாய்
எச்சமாய் விட்டுச் சென்ற ஒல்லாந்தர் கோட்டையிது
பக்கமாய் இருக்குது பார் பயங்கர தகழி முன்னால்

11. கல்லெருது புல்லுண்டு பசும் சாணம் போட்டுப் பின்
கச்சிதமாய் கால்மடித்து ஒல்லாந்தனை ஒப்பவைத்து
காசினியில் அற்புதம் நிகழ்த்திட்ட கோயிலிது
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசர் திருப்பதியாம்.

12. சின்னக் கதிர்காமம் என்றும் சிறந்த பல அறிஞர் தம்மை
முன்னம் தோற்றுவித்த முதுபெரும் பதியென வாழ்
அண்ணல் புலவர்மணி அருட்கவி சுந்தரம் பிள்ளை
பண்டிதர் கந்தையா பிறந்த மண்டூர் பதி இதுவாம்

13. மொத்தமாய் சொன்னேன் ஐயா மட்டுமா நகரின் மாண்பை
பத்துநாள் வேண்டுமின்னும் பலவிடமும் சுற்றிப்பார்க்க
சற்றுநாள் கழித்து வாரும் புத்தாண்டு பிறந்த பின்பு
முற்றும் நாம் சென்று பார்போம் முக்கிய இடங்களெல்லாம்.

## சாதிகள் ஏன் இல்லை

01. சாதிகள் இல்லை என்பதறியாமை
சமத்துவம் பேசுதல் குறைப்பிரசவம்
பகுப்புண்ட எதிலுமே சாதியுண்டு
பகைப்புலம் நாடுவதில்தான் தவறுண்டு

02. தாவர வகைகளிலும் சாதியுண்டு
தவழ்ந்தோடும் நதிகளிலும் சாதியுண்டு
நாளிலும் பொழுதிலும் சாதியுண்டு
நற்றமிழில் கூடவே சாதியுண்டு

03. பருவத்தில்தானும் உண்டு சாதிகள்
பண்பாட்டிலும் மலருதே சாதிகள்
கடமையில் கூட வரும் சாதிகள்
கண்ணில் காணும் எதிலுமே சாதிகள்

04. சாதிகள் இல்லையேல் தேவைகள்
பாறிடும் உலகினில் மானிடர்
நாகரீகம் எழுதிட ஏணிகள்
நகர்ந்திடும் இல்லாது பேனைகள்

05. ஏற்றமும் இறக்கமும் உண்டானால்
ஏற்படும் அங்கேதான் சாதிகள்
தோற்றமும் மறைவும் இரண்டானால்
தொடரும் எங்குமே சாதிகள்

06. சாதியை வைத்துப் பிழைப்பவர்
சண்டாளச் சாதியாய் மாறுவார்
ஊரையும் பேரையும் உறிஞ்சிடும் - இவர்
உணர்வற்ற சாதியாய் சாகுவார்.

# முடிந்தால் பாரடா

1. முடிந்தால் பாரடா
முடியாவிட்டால் ஓடடா
முயற்சியினால் ஆகாதது
மூவுலகிலுமே இல்லையடா

2. அவன்தான் படைத்தான்
அற்புத உடல் இதனை
அறிவும் அன்பும் பெருகிடவே
அதில் அமைத்தான் சிரசும் மனமும்

3. பகுத்தறிவென்ற பாசுபதாஸ்திரம்
பயன்படவென்றே நமக்களித்தான்
பண்போடு செயல்பட்டு வருவதற்கே
பல் நெறி உலகினை சிருஸ்டித்தான்

4. ஆசையும் கோபமும் தான் மனித
ஆக்கத்தின் எதிரிகள் என்பதனை
ஊக்கத்தை விதைத்த அவனே
ஏக்கத்துக்குள்ளே மறைத்துவிட்டான்.

5. நோக்கத்தை புரிந்து கொண்டால்
தெளிந்திடும் புரிந்திடும் எல்லாம்
தூக்கம் கலைந்திடா விட்டால்
ஏக்கமே வாழ்க்கையாய் மாறிவிடும்.

(முற்றும்)

Divisional Secretary
Divisional Secretariat
Manmunai Pattu
Arayamp

# நல்வழி

## ஆரையம்பதி க. சபாரெத்தினம்

சிறுவர் கற்பனை வளம் நிறைந்தது; அதிசயமானது; புதுமையானது. இத்தகு அதிசயமான, புதுமையான, வளம் நிரம்பிய கற்பனை உள்ளத்தை புரிந்துகொண்டும் கண்ணாரக் காணும் புலன்கள் உணர்ந்தறியும் உலகத்தை நன்கறிவோம் சிறுவர் இலக்கியமாம் நல்வழியில்.



கணபதிப்பிள்ளை சபாரெத்தினம் (1946) மட்டக்களப்பில் ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மட்/சிவானந்த தேசியப் பாட-சாலையில் கற்றுத்தேறி இலங்கை பொது எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து மட்/கல்வித்திணைக்களம் மற்றும் இதர திணைக்களங்களில் சிறப்புடன் சேவையாற்றி இலங்கை வெளிநாட்டு சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து (1991) ரஷ்ய நாட்டிற்கான இலங்கை வெளிநாட்டுத் தூதரகம் மொஸ்கோவில் பணியாற்றும் காலை இவரது அனுபவ அறிவின் மூலமாக 'மொஸ்கோ அனுபவங்கள்' என்றதொரு பயணக் கட்டுரை வகை இலக்கியத்தினை தமிழ் இலக்கியப் பரப்பிற்கு நல்கி வளம் சேர்த்தமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலைக் காலத்திலிருந்தே 'பீஸ்மாச்சாரி', 'ஆரையம்பதி க. சபாரெத்தினம்' எனும் புனைப்பெயர்களில் கவிதை, கட்டுரை, நாடகம், சிறுவர் இலக்கியம் முதலானவற்றை எழுதியவர். தற்போது அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற நிலையில் மண்முனைப்பற்று மத்தியஸ்த்த சபையின் உறுப்பினராகச் சேவையாற்றுகின்றார்.

ISBN 978-955-53426-1-2

9 789555 342612

wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa. T.P: 065 2227170